

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (6.5.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சார்ந்த 3,000 மாற்றுக்கட்சியினர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டச் செயளலாளர் நிவேதா முருகன், துணைச் செயலாளர் செல்வமணி, அவைத் தலைவர் சீனிவாசன் மற்றும் தலைமைக் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.5.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, தான் எழுதி முதலமைச்சர் அவர்களால் சென்னையில் 17.5.2025 அன்று வெளியிடப்படவுள்ள ”தேசியக் கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை” என்ற நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.5.2025) முகாம் அலுவலகத்தில், நடிகர் பிரகாஷ்ராஜ் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.





வழக்கறிஞர் ப.தாயகம்கவி M.A.,B.L.,M.L.A.,
கழக அமைப்பு துணை செயலாளர், திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்